**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 25/2020**

**Deposition of P .W.1-** ஜஸ்டின்

**Dated: 29.11.2024**

**<u>1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்திற்குள்ளான இருவாகனங்களும் இருசக்கர வாகனம் என்றால் சரிதான். சம்பவ சாலை வளைவுகள் இல்லாத நேர் சாலை என்றால் சரிதான். இரண்டு வாகனங்களும் எதிர், எதிர் திசையில் நேராக வந்து மோதியது. TN 75 U 5790 என்ற இருசக்கர வாகனம் 25.06.2017 முதல் 24.06.2017 வரையிலான காலத்தில் மட்டுமே 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்து நடைபெற்றது 11.12.2018 என்றால் சரிதான். விபத்து சமயம் அந்த வாகனத்திற்கு 3ம் எதிர்மனுதாரரை பொறுத்த காப்பீடு இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. அதிகமான இழப்பீடு தொகை கேட்டுள்ளனேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு தொகை கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>4வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபதத்து நாளன்று நான் TN 75 AF 4880 என்ற இருசக்கர வாகனத்தை கவனமாக ஓட்டி வந்தேன் என்றால் சரிதான். TN 75 U 5790 என்ற இருசக்கர வாகனத்தை இயக்கிய 1வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் இடது

பக்கமாக தான் போனேன். எனது வாகனத்திற்கு நான் 3ம் தரப்பினர் கிடையாது. வாகனத்தின் உரிமையாளர் விபத்து நாளில் என்னுடன் தான் பணியில் இருந்தார். என் மீது தவறு இல்லாமல் 4வது எதிர்மனுதாரரிடம் இழப்பீடு தொகை பெற உரிமையில்லை என்றால் சரியல்ல. வாகனத்தின் உரிமையாளரை நான் கட்சியாக சேர்க்கவில்லை. மருத்துவ சிகிச்சையின் போது உடலின் எந்த பாகமும் நீக்கபடவில்லை. கண்பார்வையில் பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. எனக்கு 4வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.